بسم الله الرحمن الرحيم

# இறைச் சட்டத்திற்கு எதிரில் மனிதனின் சட்டம்!

கலீபத்துல்லாஹ் ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள்

**ஜமாத்துல் ஸஹீஹ் அல் இஸ்லாம்**

**தமிழ்நாடு**

# முன்னுரை.

'இறைச் சட்டத்திற்கு எதிரில் மனிதனின் சட்டம்' என்ற தலைப்பில் காலத்தின் இமாம் அவர்கள் ஒரு வெள்ளிக்கிழமை சொற்பொழிவை காலத்தின் சூழ்நிலையை கருதி தமிழாக்கம் செய்து இந்த சிறுநூல் உங்கள் கரங்களில் தவழச் செய்வதில் ஜமாஅத்துல் ஸஹிஹுல் இஸ்லாம் தமிழ்நாடு பெரும் மகிழ்ச்சி அடைகின்றது.

இருபத்தைந்து பக்கங்களுக்கும் குறைவாக இருக்கும் இந்தச் சிறு நூலில் காலத்தின் வழி கேட்டையும் ஒரு இறைத்தூதரின் வருகையின் தேவையையும் அவசியத்தையும் எடுத்துக் கூறுகிறார்கள். மேலும் அன்னார் மனிதன் ஒரு சட்டத்தை இயற்றுகின்றான். அது இறைச் சட்டத்திற்கு எதிராக மாற்றப்படும்போது எதிர்பாராத விளைவுகளை சந்திக்கிறது என்றும்,, தலைவர்களின் மீதான அச்சம் மக்களது உள்ளத்தை பற்றி பிடித்ததன் விளைவாக தமது உள்ளத்திலிருந்து எல்லாம் வல்ல இறைவனின் மீதான நம்பிக்கையை முற்றிலுமாக அழிந்து விடுகின்றது. என்று கூறி மனிதகுலத்தை எச்சரித்ததோடு மட்டுமல்லாமல் தமது வாழ்வில் நிசாமிகள் இழைத்த அநீதியையும் சுட்டிக்காட்டி விளக்குகிறார்கள்.

எனவே எல்லாம் வல்ல அல்லாஹ்வின் நல்லடியார்களே! சகோதர சகோதரிகளே!! இச்சிறு நூலை நீங்கள் வாசிக்கும்போது இதில் கூறப்பட்டு இருக்கின்ற ஒவ்வொரு வார்த்தைகளும் இக்காலத்தில் நடந்துகொண்டிருக்கும் நிதர்சனமான உண்மை என்றும் அதை நிவர்த்தி செய்யும் பொருட்டு ஒரு நபியின் தேவை அவசியம் என்றும் மிக எளிதாக புரிந்து கொள்ளலாம்.

இதன் மூலம் உண்மையை தேடுகின்ற நல்லடியார்களுக்கு எல்லாம் வல்ல இறைவன் நேர்வழி காட்டுவானாக!! ஆமீன்! வஸ்ஸலாம்.

**அமீர், ஜமாத் உல் ஸஹீஹ் அல் இஸ்லாம்,**
**தமிழ்நாடு.**

## நூலாசிரியர்

கலீஃபத்துல்லாஹ் ஹஸ்ரத் முனீர் அஹ்மது
அஸீம் (அலை) அவர்கள்



நபி(ஸல்) அவர்களின் ஆன்மீக மகனாகவும், மஸீஹ்(அலை) அவர்களின் ஆன்மீக மகனாகவும் அல்லாஹ் அவர்களை அனுப்பியுள்ளான். புனிதத்திருமறையின் ஸூரா அல்-ஹிஜ்ர் 10 வது வசனத்தில் அல்லாஹ் சுபஹானஹுதாஆலா

إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ

"இந்த (குர்ஆனாகிய) அறிவுரையை நாமே இறக்கினோம். நிச்சயமாக நாமே இதனை பாதுகாப்போம்." (என்று)

உறுதியளித்தது போல் அதன் எழுத்துக்களை மட்டுமல்லாமல் அதன் உண்மை கருத்தையும் (ரூஹையும்) பாதுகாக்கின்றான். மேலும்,இந்தப்பணியை ஒவ்வொரு நேரத்திலும் முஸ்லிம்களில் இருந்து இறைவனால் எழுப்பப்படும் மார்க்க சீர்திருத்தவாதி கள் மூலம் செய்கின்றான். இந்த மார்க்க சீர்திருத்தவாதிகளை இஸ்லாமிய சொல்வழக்கில் “முஜத்தித்கள்” என்று அழைக்கப் படுகின்றார்கள். இவ்வாறு இறைவன் புறத்திலிருந்து தோன்றும் முஜத்தித்மார்கள் இறைவனிடமிருந்து வஹீயை பெற்று திருக்குர்ஆனின் வார்த்தைகளுக்கு உண்மையான மற்றும் விரிவான விளக்கத்தை வழங்குகின்றனர். இவ்வாறு தோன்றும் முஜத்தித்மார்கள் மற்ற மார்க்கத்திலும், அந்த மார்க் கத்தின் வேதம் அதை பின்பற்றுபவர்களுக்கு வழிகாட்டும்வரை வந்து கொண்டிருந்தார்கள். ஆனால் எப்போது இஸ்லாம் தோன்றிவிட்டதோ அதற்கு பிறகு மற்ற அனைத்து மார்க்கங் களும் மற்றும் வேதங்களும் முடிவுக்கு வந்துவிட்டன.

ஏனென்றால் அவை அனைத்தும் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற் காக அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திற்க்காக அருளப்பட்டிருந் தது. எனவே இங்கே முஜத்தித்மார்கள் தோன்றுவது முடிவுக்கு வந்துவிட்டது. மேலும் திருக்குர்ஆன் ஒன்றே இப்போது உலகப் பொதுமறையாக ஓர் வாழும் வேதமாக உள்ளது. எனவே இறை வனிடத்திலிருந்து தோன்றும் இத்தகைய மார்க்க சீர்திருத்த வாதிகளாகிய முஜத்தித்மார்கள் இஸ்லாமிய மார்க்கத்தில் மட்டும் தோன்றிக்கொண்டே இருக்கின்றார்கள். இவ்வாறே நாம் வாழும் காலத்தில் இறைவனால் 15வது நூற்றாண்டில் முஜத்தித்தாக எழுப்பட்டவரே ஹஸ்ரத் முனீர் அஹ்மத் அஸீம் (அலை)அவர்கள். அன்னார் இந்த நூற்றாண்டின் இறை வஹீயின் மூலம் திருகுர்ஆன் விளக்கவுரையை அல்-அஸீம் தஃப்ஸீரூல் குர்ஆன் என்ற பெயரில் 23 பாகங்களாக எழுதியுள்ளார்கள். அல்ஹம்துல்லாஹ், மொரீசியஸ் நாட்டை சேர்ந்த ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம் அவர்கள், ஜனவரி 07, 1961 அதாவது ஹிஜ்ரி 1380 ரஜப் மாதம் 19ம் நாள் பிறந்தார்கள், மேலும் அன்னார் சர்வதேச ஜமாஅத் உல் ஸஹீஹ் அல் இஸ்லாம் என்ற ஜமாஅத்தின் புனித தோற்றுனர் ஆவார்கள். ஒரு சாதாரணப் பொருளாதார வளமும், ஆழந்த ஆன்மீக ஈடுபாடும், மற்றும் சேவை மனப்பான்மையும் கொண்ட ஒரு முஸ்லிம் குடும்பத்தைச் சார்ந்த முனீர் அஹ்மது அஸீம் அவர்களின் காலம் சென்றப் பெற்றோரான மர்ஹூம் ஸாலிம் அஸீம் ஸாஹிப் மற்றும் முஹ்மின் அஸீம் ஸாஹிபா ஆகிய இருவரும் மிகுந்த பயபக்தியுடைய முஸ்லிம்களாக இருந்தனர்.

மேலும், அன்னார் இளம் வயதிலேயே மிகுந்த மார்க்கப்பற்றும், ஆன்மீக ஈடுபாடும் கொண்டப் பின்னணியில் வளர்ந்தார்கள், இஸ்லாமிய ஆய்வுகளில் அசாதாரண ஈடுபாடும்,முஸ்லிம் மற்றும் முஸ்லிம் அல்லாதவர்களின் மார்க்க விவாதங்களில் மிகுந்த ஆர்வமும் காட்டி வந்தார்கள். மேலும், அன்னார் தனக்கு வாய்ப்பு வழங்கப்படும் போதெல்லாம், தன்னுடைய அபாரமான வாதத்திறமையின் காரணமாக, இஸ்லாத்தின் மதிப்பையும், அதன் போதனைகளையும் பாதுகாப்பதில் மிகத் திறமையுடன் செயல்பட்டார்கள். இத்தகைய திறமையான, தனித்துவமிக்க, முழுமையான பண்புகளும் மற்றும் ஆழ்ந்த

ஆன்மீக ஞானமும் பெற்றதன் விளைவாக, பல்வேறு சமுதாயங்களுக்கும், இந்த தீவுதேசத்தில் மட்டுமன்றி மொரீசியஸின் வெளிப்புறப்பகுதிகளுக்கும் இன்னும் இறுதியில் அன்னாரை இஸ்லாத்தின் தூதராகவும் ஆக்கப்பட்டார்கள். மேலும் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்டவைக்கும் பணியில் அவருடைய ஆழமான அர்ப்பணிப்பையும், மற்றும் மேன்மையான சேவைகளையும் அன்னார் செய்து கொண்டு வருகின்றார்கள் ,மேலும், இஸ்லாமிய உலகின் நம்பிக்கையை பொறுத்தவரை அல்லாஹ், திருகுர்ஆனில் பாதுகாக்கப்பட்ட ஆழமான நுட்பத்தையும், என்றும் அழியாத தன்னுடையப் போதனைகளை விளக்கி கூறுவதற்காகவும், ஒவ்வொரு நூற்றாண்டிலும் முஸ்லிம் சமுதாயத்திற்கு ஒரு சிறந்த வாழும் முன்மாதிரியை ஏற்படுத்துவதற்காகவும் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஆன்மீக சீர்திருத்தவாதிகளை எழுப்புகின்றான் என்பதாகும். மேலும் முனீர் அஹ்மது அஸீம் சாஹிப் அவர்கள் ஆன்மீக ஈடுபாட்டுடனும் மற்றும் மார்க்கப் பற்றுடனும் கூடிய ஒரு வாழ்க்கையை வாழ்த்து கொண்டிருக்கும் போது அன்னாரின் 40 வயதிலிருந்து இறைவஹீ வரத்தொடங்கியது. மேலும் அந்த இறையறிவிப்பு எவ்வகையானது என்றால் அது இஸ்லாம் மற்றும் உலகின் எதிர்காலம் தொடர்பானதாகவும் மற்றும் ஆன்மீகம், மற்றும் பௌதீகம் தொடர்பான பல்வேறு விஷயங்களை உள்ளடக்கியதாகவும் இருந்தது.

இருப்பினும் அன்னாருக்கு இறங்கிய இறை வெளிப்பாடுகளை அன்னாரின் சமுதாயத்தினரால் மறுக்கப்பட்டு அன்னாரை ஜமாஅத்திலிருந்து வெளியேற்றினர் அன்னாருக்கு நெருக்கமானவர்களே ஏற்றுக்கொள்ளாமல் அன்னாரை அமைப்பிலிருந்து வெளியேற்றியபோதும், அல்லாஹ் அன்னாரை ஏற்றுக்கொண்டான், மேலும் அவன் அன்னாருக்கு அவனது மறைவானவற்றின் ஞானத்தை கற்றுக்கொடுத்து அந்த மேலான பொக்கிஷத்தை வழங்கினான்.

மேலும் அல்லாஹ் அன்னாரை கடந்த பத்து ஆண்டுகளில் படிப்படியாக ஆன்மீக நிலையை உயர்த்தி அன்னாருக்கு "'கமரம் முனீரா' (வெளிச்சம் கொடுக்கும்சந்திரன்), கலீஃபதுல்லாஹ்'

(அல்லாஹ்வின் நண்பர்), ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் (முஃமின்களின் தலைவர்), 'முஹையுதீன்' (மார்க்கத்தைப் புதிப்பிப்பவர்), 'முஸ்லியுத்தீன்' (மார்க்கச்சீர்திருத்வாதி), 'முஜத்தித் (மார்க்கத்தைப் புதுப்பிப்பவர்), 'முஸ்லீஹ் மவ்வூது' (வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி), கலீஃபத்துல்லாஹ் (அல்லாஹ்வின் கலீஃபா), மஸீஹுல்லாஹ், நபியுல்லாஹ் மற்றும் காலத்தின் இமாம், போன்ற பதவிகளை வழங்கினான். மேலும், டிசம்பர் 2003ம் ஆண்டு, முனீர் அஹ்மது அஸீம்(அலை) அவர்கள் தன்னுடைய இறை வெளிப்பாடுகள் தொடர்பாக சூளுரைத்துள்ளார்கள்.

## கலீபத்துல்லாஹ் ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம் (அலை)

*நான், அந்த ஏக இறைவனாகிய அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து கூறுகின்றேன். 'நானே இந்த நூற்றாண்டின் வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும், நபியுல்லாஹ்வாகவும், கலிஃபத்துல்லாவாகவும் இருக்கின்றேன்.*

# இறைச் சட்டத்திற்கு எதிரில் மனிதனின் சட்டம்

இன்றைய சூழலில், மக்கள் இறைச் சட்டத்தை காட்டிலும், தங்களது (மன) விருப்பத்திற்குரிய(வற்றின்/)வர்களின் வழி(முறை)களுக்கு மிக அதிக முக்கியத்துவம் வழங்குபவர்களாக உள்ளனர். இவ்வாறு மனிதனால் உருவாக்கப்படும் இத்தகைய சட்டங்களின் காரணமாகவே, இப்பூமியின் வாழ்வியல் முறைகள் குலைக்கப் படுவதுடன், ஆன்மீக போதனைகளும் அழிக்கப்படுகின்றன. மேலும், மனிதனால் இயற்றப்ப டும் சட்டங்களை, அவன் தங்களிடம் கீழ்ப்படிதலைக் காட்டாதவர்களிடம் மிகவும் கடினமான முறையில் நிலை நாட்டுகின்றான். (இத்தகைய முறையிலான சட்டங்களே, மனிதனால் இயற்றப்படும் சட்டங்களும், கட்டளைகளுமாகும்). இவ்வாறே, இந்த மக்கள் தங்களுடைய சட்டங்களை பின்பற்றி நடக்காதவர்களுக்கு எதிராக, நடவடிக்கை எடுக் கும் அளவிற்கு சென்று விடுகின்றனர்.

மேலும், இறைச்சட்டங்கள் எல்லாம் மனிதனால் இயற்றப்படும் சட்டங்களால் மாற்றப்படும் போது, இத்தகைய எதிர்பாராத விளைவு களையே இவ்வுலகம் சந்திக்க நேரிடுகின்றது. மேலும், இக்காலத்தில், மனிதன் இறைச் சட்டங்களிலிருந்து முற்றிலுமாக விலகி, மனிதனால் இயற்றப்படும் சட்டங்களுக்கே அதிகமாக முக்கியத்துவம் வழங்குபவ னாக உள்ளான். இதன் காரணமாகவே, இவ்வுலகிலும், ஒரு நாட்டிலும், ஒரு சமுதாயத்திலும், ஒரு ஜமாத்திலும், ஒரு குடும்பத்திலும், மற்றும் உங்களுடைய சுற்றுப்புறங்களிலும் கூட என்ன நடந்துக் கொண்டிருக் கின்றது என்பதனை (உங்களால்) பார்க்கமுடிகின்றது.

மேலும், தங்களை புத்திசாலிகளாகவும், கற்றறிந்தவர்களாகவும், அறிஞர்களாகவும் கூறிக்கொள்பவர்களும் கூட, இறைச்சட்டங்கள் யாவற்றையும் ஒரு ஓரமாக ஒதுக்கி தள்ளிவிட்டு, தங்களுடைய சொந்த

கருத்துக்களையே முன்னெடுத்து வைக்கின்றனர். மேலும் துரதிர்ஷ்ட வசமாக, அவர்களைப் பின்பற்றும் மக்களும் கூட, தங்களின் சுய அழிவின் பக்கம் தாங்களே செல்வதுடன், அவர்களுடைய இறை அச்சமும் (அவர்களை) விட்டும் மறைந்து விடுகின்றது.

மேலும், அவர்கள் குருவாக கருதும் தங்களுடைய தலைவர்களின் மீதான அச்சமானது அவர்களுடைய உள்ளங்களைப் பற்றிப் பிடித்துக் கொண்டதன் விளைவாக, இந்த மக்களின் உள்ளங்களிலிருந்து, எல்லாம் வல்ல இறைவனின் மீதான நம்பிக்கை முற்றிலுமாக அழிந்து விடுகின்றது.

மேலும், அவர்கள் படைத்தவனைக் காட்டிலும், மனிதர்களுக்கே அதிகமாக அஞ்ச தொடங்குகின்றனர். அவர்கள் செய்யும் அனைத்திலும், தாங்கள் செய்யும் செயல்களும், மற்றும் பணிகளும் தங்களுடைய தலைவரின் திருப்தியை நாடியேயன்றி, அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக எந்தவொரு காரியமும் அவர்கள் செய்யவில்லை. இதன் காரணமாகவே, எங்கு பார்த்தாலும் அமைதியின்மையும் மற்றும் பூமியின் மீது தீங்குகளும் நிறைந்து காணப்படுகின்றன. இதனாலேயே, அல்லாஹ் ஸுப்ஹானஹுவ தஆலா, மனிதனுடைய உணர்வை தட்டி யெழுப்புவதற்கும் (அதாவது, மனிதனுக்கு தன்னுடைய தவறுகளையும், குற்றச் செயல்களையும் உணர வைப்பதற்காகவும்) மற்றும் அல்லாஹ் ஒருவனை தவிர வேறு இறைவன் இல்லை என்பதை அவனுக்கு உணர வைப்பதற்கும் தன்னுடையக் கோபத்தை அவன் வெளிப்படுத்து கின்றான்.

ஆகவே, நம்முடைய அன்றாட வாழ்க்கையில் ஏற்படுகின்ற இத்தகைய சீரழிவுகளை அல்லாஹ்வின் சட்டத்தால் மட்டுமே தடுக்க முடியும். இறைச்சட்டமானது (கடந்த) 1400 வருடங்களுக்கு முன்பாகவே தன்னை (அதாவது அதன் உண்மைத் தன்மையை) நிரூபித்துள்ளது. மேலும் (இறைச்சட்டமானது) இறைவனுடைய உண்மையான போதனை களுக்கு புத்துயிர் வழங்குவதற்கும், நேரான பாதையான அல்லாஹ்வின் ஒரே கயிற்றைப் பற்றிப்பிடித்து, மக்கள் அனைவரையும் அல்லாஹ்வை நோக்கி திரும்புவதற்கும் பரிசுத்த ஆவி (ருஹில் குதுஸ்)டன் கூடிய ஒரு இறைத் தூதரின் வருகையின் மூலம் இப்போதும் அதன் உண்மைத்தன்

மையை) நிரூபித்துக் கொண்டிருக்கிறது.

மேலும், (நமது) உள்ளத்திலிருந்து மனிதர்கள் மீதான அச்சத்தை அகற்றிவிட்டு, அதனை இறைவன் மீதான அச்சமாக மாற்றவேண்டும். மேலும், இவ்வுலகில் இறை சட்டங்களின் காரணமாக ஏற்படும் தாக்கங்களையும் சற்று உற்று நோக்கிப் பாருங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, இவ்வுலகம் முழுவதும் அல்லாஹ்விற்கே உரியது என்று மதிப்பிடப்பட்ட பகுத்தறிவும் கூட சுட்டிக்காட்டுகின்றது. அன்றியும், அல்லாஹ் ஒருவனே மனித இனத்தை படைத்தவனாகவும், அவனே மனித இயல்புகளை (முற்றிலும்) அறிந்தவனாகவும் இருக்கின்றான். ஆகவே, (அல்லாஹ்) அவனே படைத்துள்ள அவனது படைப்புகளின் நலனிற்காக பயன்படுத்த வேண்டிய சட்டங்களை தீர்மானிப்பதற்கு மிகவும் பொருத்தமானவராக யார் இருக்க முடியும்? நிச்சயமாக, அது அல்லாஹ்வைத் தவிர வேறு யாராக இருக்கமுடியும்?

மனிதனுடைய சட்டங்கள் என்பது பிளவுகளால் (அதாவது தோல்விகளால்) நிறைந்துள்ளன. (மனிதர்கள்) குடும்ப உறவுகளை முறிப்பதும், குடும்ப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்ளாமல் புறக் கணிப்பதும், மற்றும் மனித உள்ளங்களில் மனித சட்டங்களின் மீது ஒரு அச்சத்தை உருவாக்குவதும் போன்ற பல தோல்விகளைக் கொண்ட தாகவே இ(ம்மனித)ச் சட்டங்கள் உள்ளன. மேலும், அவர்கள் எதனை மற்றவர்களுக்கு போதிக்கின்றார்களோ, அதனை தங்களுடைய செயல்களில் எந்த விதத்திலும் நடைமுறைப்படுத்துவது கூடகிடை யாது. மேலும், அவர்கள் மக்களுடைய பார்வைக்காக, 'எல்லோரிடத்தும் அன்பு, எவரிடத்தும் வெறுப்பில்லை' எனக் குறிப்பிடும் பெரிய விளம் பரங்களையும், விளம்பர பலகைகள், மற்றும் வெளிப்புற அடையாள பலகைகளையும் வைத்து பரப்புகின்றனர். அன்றியும், மனிதனால் இயற்றப்படும் சட்டங்களின் பக்கம் (அவர்களால் உருவாக்கப்பட்ட சட்டங்களுக்கு) கீழ்ப்படிதலைக் காட்டாதவர்களுடன், இப்படிப்பட்ட மக்கள் முழுமையான வெறுப்புடன் நடந்து கொள்வதுடன், தங்களுடைய உண்மையான முகங்களையும் வெளிப்படுத்தி வருகின்றனர். இவ்வாறு மனிதனால் இயற்றப்படும் சட்டங்கள் யாவும் தோல்விகள் நிறைந்ததாகவே இருக்கின்றது. மேலும், இறை சட்டங்களின் பக்கம் எந்தவொரு கீழ்ப்படிதலையும், கண்ணியத்தையும்

காட்டாமலும், அதனை நடைமுறைப் படுத்தாமலும் இருக்கும் இவர்களே, சத்தியத்தின் சிறந்த பாதுகாவலர்கள் என்று தங்களைக் கூறிக் கொள்கின்றனர். ஆகவே இவர்களைப் பொறுத்தவரை, இவர்கள் மட்டுமே சொர்க்கத்திற்குள் நுழைய உரிமம் பெற்றவர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்வதுடன், தாங்களே மற்றவர்களின் நம்பிக்கை யையும் தீர்மானித்து விடுகின்றனர்.

எனினும் இறைச்சட்டம் நமக்கு போதிக்கும் உண்மை என்னவென்றால், எல்லாம் வல்ல இறைவன் நமக்கு போதிப்பது என்னவென்றால், (எல்லாம் வல்ல இறைவனாகிய) அவன் மட்டுமே இவ்வுலகின் சிறந்த நீதிபதியாக இருக்கின்றான் என்பதாகும். மேலும், மனிதர்கள், தங்களைப் போன்ற தங்களுடைய சக மனிதர்களின் இறை நம்பிக்கை யைக் குறித்து தீர்மானிக்க முடியும் என்பதாக இறைச் சட்டங்களில் எந்த இடத்திலும் கூறப்படவும் இல்லை;. அதன் காரணமாக ,குடும்பங்களைப் புறக்கணிப்பதற்கோ, குடும்ப உறவுகளை முறித்துக் கொள்வதற்கோ, (இஸ்லாமிய வாழ்த்தாகிய) ஸலாத்திற்கு பதிலளிக்காமல் இருப்பத ற்கோ அவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை.

மேலும், மொரீஷியஸில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை குறித்தும் தற்போது உங்களுடன் பகிர்ந்துக் கொள்ள விரும்புகிறேன். அதாவது, தற்போது ஒரு ஜமாஅத்தை சார்ந்த மக்கள், தங்களுக்கு மட்டுமே சொர்க்கத்தின் பாதையும் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளதாக நினைத்துக் கொண்டு, மற்றவர்களை குறித்து முட்டாள்கள் என்றும் அறிவற்ற மக்கள் என்றும் கருதி வருகின்றனர்.

(கழிந்த) பிப்ரவரி 02, 2019 அன்று, அந்த ஜமாத்தின் தலைவர், மக்களு டைய பிரச்சினைகளைக் குறித்து அறிந்து வருவதற்காக ஒருவரை மொரீஷியஸிற்கு அனுப்பியுள்ள தகவலை தெரிவிக்கும் பொருட்டு, இரவில் எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அதாவது, அந்த ஜமாத்தின் தலைவரின் பிரதிநிதியுடன் தொடர்பில் இருக்கும் ஒரு பயந்த சுவாவமுள்ள அந்த நபரின் வாயிலாக என்னிடம் கூறப்பட்டதாவது, 'நான் என்னுடைய பிரச்சினைகளைக் குறித்து முன்வந்து விளக்குவதற்கு எனக்கு ஒரு வாய்ப்பு கிடைத்திருப்பதாக வும், அந்த (பயந்த சுவாவமுள்ள) நபர் என்னுடன் இருப்பதன்

காரணமாக, நான் எதனைக் குறித்தும் கவலைப்பட தேவையில்லை' என்பதாகவும் கூறப்பட்டது. அதற்கு, நான் இத்திட்டம் குறித்து திட்ட வட்டமாக மறுத்துவிட்டு கூறிய பதிலாவது, "இந்த ஜமாஅத்திலிருந்து என்ன காரணத்திற்காக நான் வெளியேற்றப்பட்டேன் என்ற விளக்கத்தை உங்களுடைய தலைவர் அனுப்பிய அந்த நபரிடம் கேட்டு (எனக்குக்) கூறுங்கள்?" என்று கூறினேன். மேலும் கூடுதலாக, நான் சில நிபந்த னைகளையும் முன்வைத்தேன்: அதாவது, நாம் இவ்வாறான முறையில் சந்திக்கக் கூடாது என்றும், மொரீஷியஸில் உள்ள ஒட்டு மொத்த அஹ்மதிய்யா ஜமாஅத்தையும் மற்றும் அதன் பிரதிநிதியையும் வருமாறு அழைப்பு விடுக்க வேண்டும். அதாவது, இவ்வாறு நாம் பேசுவதன் மூலமாக மட்டுமே, உண்மைகளனைத்தும் உடைக்கப்பட்டு, அந்த உண்மை நிலையை ஒட்டு மொத்த ஜமாத்தும் அறிந்துக்கொள்ள முடியும். மேலும், இந்த எளியவனான நான் மனிதர்களுடைய சட்டங்களை, அதாவது, குறிப்பாக அவர்களின் தலைவருடையச் சட்டங்களை பின்பற்றாமல், இறைச் சட்டங்களைப் பின்பற்றியதன் காரணத்திற்காகவா நான் வெளியேற்றப்படவும், மற்றும் (அவர்களது) அனைத்து விதமான சட்ட திட்டங்களின் காரணமாக, என்னிடம் மற்ற வர்கள் தொடர்பு கொண்டு (உண்மையை அறிந்து) கொள்ள முடியாத படியும் ஆக்கப்பட்டேன்?

ஆகவே, நான் பிப்ரவரி 10, 2019 தேதியிட்ட ஒரு 12 பக்க கடிதத்தின், துவக்கத்தில் தனிப்பட்ட, மற்றும் ரகசியமானவை என்று குறிப்பிட்டி ருந்த ஒரு கடிதத்தை எழுதினேன். மேலும், என்னுடைய நிபந்தனை களையும் [குறிப்பாக, என்னுடைய வேலை, சம்பளம், மற்றும் நஷ்டஈடு தொடர்பாகவும்] அதில் குறிப்பிட்டிருந்தேன். அத்துடன், அந்த நிபந்தனை களை அவர் ஏற்றுக்கொண்டால், நான் நேரில் வருவதாகவும், அப்போது, ஒட்டுமொத்த அஹ்மதிய்யா ஜமாஅத்தை சார்ந்தவர்களும் அவ்விடத்தில் இருக்கவேண்டும் என்றும், அவர்கள் அனைவரும் இதன்மூலம், உண்மையை அறிந்துகொள்ள முயற்சி செய்யவேண்டும் என்றும் குறிப் பிட்டிருந்தேன், இன்ஷா-அல்லாஹ்.

என்னுடைய கடிதம் அவருக்கு கிடைத்திருந்தாலும், அவர் எனக்கு எந்தவொரு அதிகாரப்பூர்வப் பதிலையும் தராததுடன், தன்னுடைய நிலையிலிருந்தும் அவர் பின் வாங்கிவிட்டார். மேலும், அவர் இங்குள்ள மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க வந்துள்ளவர் என்பதும் (கூட)

ஒரு கற்பனைக் கதையாகும். இன்னும் கூறப்போனால், என்னுடன் தொடர்பில் இருக்கும் (ஒரு அஹ்மதி) நண்பர் மூலமாக நான் தெரிந்துக் கொண்டதாவது, தாருஸ்-ஸலாம் மசூதியின் முன்பாக, ஜமாத்தினுள் நிகழும் பிரச்சினைகளை முறையிடும் பொருட்டு, ஒரு நீண்ட வரிசையிலான மக்கள் கூட்டம் நிற்பதைக் கண்டுதான் மிகவும் வேதனை அடைந்ததாகக் கூறினார். அதாவது, அவ்வரிசை நீண்ட வரிசையாக இருந்த போதிலும், அவர் காத்திருந்து, தன்னுடையப் பிரச் சினைகளை விளக்குவதற்கான தன்னுடைய நேரம் வந்தபோது, அவர் ஜமாஅத்தினுள் நிகழும் பிரச்சினைகளைக் குறித்து தான் சொல்ல வேண்டிய அனைத்தையும் சொன்னதாக கூறினார். அப்போது, அந்த மனிதர் (பிரதிநிதி) எதற்குமே பதில் கூறாமல் அமைதியாக இருந்த வண்ணம், அவர் கூறிய அனைத்து விஷயங்களையும் குறிப்புகளாக மட்டும் எடுத்துக்கொண்டதாகவும் அவர் கூறினார். அவரிடம் நான், 'உங்களுடைய கேள்விகளுக்கு ஒருபோதும் அவர் பதிலளிக்க மாட்டார்' என்று கூறினேன். இவ்வாறாக, அவர்களின் பிரச்சினைகளை விளக்க வந்த மக்களின் (மிக) நீண்ட வரிசைகள் இருந்தன. (ஆனால்), தற்போது வரை, (அந்த ஜமாத் பிரதிநிதியிடமிருந்து) எந்த பதிலும் இல்லை. மேலும், எனது சொந்த குடும்ப வட்டத்தில், அதாவது சொந்த இரத்த பந்தத்தில் ஒரு திருமணம் நிகழ்ந்தபோதும், அவர்கள் என்னையும், எனது குடும்பத்தினரையும் கூட முழுவதுமாக புறக்கணிக்க வேண்டும் என்பதில் அவர் மிகவும் பிடிவாதமாக இருந்தார். அதாவது, இதுதான் அல்லாஹ், மற்றும் அவனது தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் போதனைகளாக உள்ளனவா? நாம் இப்போது எங்கே சென்றுக் கொண்டிருக்கின்றோம்? ஒரு நயவஞ்சகராகவும், நயவஞ்சகத்தனத்தை வெளிப்படுத்தும் அத்தகையதொரு விளம்பரமும், (அதாவது) இங்குள்ள (அஹ்மதி) மக்களுடைய பிரச்சினைகளை தீர்க்க வந்துவிட்டார் என்பதைப் போன்று!. மேலும், வாக்களிக்கப்பட்ட மஸீஹான ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது நம்பிக்கைக் கொண்டுள்ள இம்மக்களிடத்தில் ஒரு போலியான நம்பிக்கையை எற்படுத்தி விடாதீர்கள். இவர்களில் பெரும்பாலான மக்கள், எல்லை கடந்து (மனிதனால் தேர்ந்தெடுக்கப்பட்ட) தங்களுடைய கலீஃபாவின் மீதான நம்பிக்கையில் குருடர்களாகவே ஆகிவிட்டனர். அவர்கள் எந்தளவுக்கு வரம்பு மீறி சென்று விட்டார்கள் என்றால், அல்லாஹ்வும் அவனது தூதர் (ஸல்) அவர்களும் இன்னின்ன விஷயங்களையெல்லாம் கற்பித்தார்கள்.

என்று சொல்வதை கூட அவர்கள் நிறுத்திவிட்டார்கள். (அதற்கு மாறாக) தற்போது, அவர்கள் (எவ்வாறான நிலையில் உள்ளனர் என்றால்,) "கலீஃபா இவ்வாறு கூறினார், கலீஃபா அவ்வாறு கூறினார்" போன்ற கூற்றுக்களையே (அதிகமாக) கூறுகின்றனர்.

மேலும், நான் அந்த கடிதத்தில் எழுதியிருந்த விஷயங்களிலிருந்து,, குறைந்தபட்சம் அதில் நான் குறிப்பிட்டிருந்த விஷயங்களின் ஒரு குறிப்பிட்ட பகுதிக்காவது அவர்கள் உடன்பட்டிருந்தனர் என்று தான் கூற வேண்டும். அதிலும், செயற்குழு பொறுப்பாளர்களை மாற்றுவது தொடர்பான விஷயத்தில் மட்டும். எனினும், என்னுடைய சம்பளம், மற்றும் நிபந்தனைகளைப் பொறுத்தமட்டில், அவர்களிடம் இருந்து எந்த பதிலும் வரவில்லை. மேலும், அஹ்மதி முஸ்லிம்கள் சிலரின் வாயிலாக, (முன்னர்) ஜமாத்தில் கடன் உதவிகளுக்கான சில ஒப்பந்தங்கள் செய்யப்பட்ட தற்போதைய நிலைமைகளைக் குறித்தும் உங்களிடம் கூற விரும்புகின்றேன். எனினும், இக்காலத்தின் இறை வெளிப்பாட்டின் உண்மை நற்செய்தி அவர்களுக்கு கிடைத்ததன் பிறகு, அவர்கள் தங்களுடைய (ஜமாத்திலிருந்து) வெளியேறி ஜமாத்-அல்-ஸஹீஹ்-அல் இஸ்லாத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். மேலும், அந்த ஜமாத்தை சேர்ந்த முல்லாக்களும் மற்றும் நிர்வாகமும் புதிதாக இறைவெளிப்பாடுகளை ஏற்றுக்கொண்ட நம்பிக்கையாளர்களுக்கு எதிராக, இவ்விஷயங்களை தற்போது பயன்படுத்த முயற்சிக்கின்றனர். மேலும், நீண்ட காலத்திற்கு முன்பாக, இவர்கள் ஒப்பந்தம் செய்த அக்கடன்களின் காரணமாக, ஜமாத்-அல் ஸஹீஹ்-அல்-இஸ்லாத் திற்கு கெட்ட பெயரை ஏற்படுத்தவும் அவர்கள் பிடிவாதம் காட்டுகின்றனர்.

குறிப்பாக, இங்கு மொரீஷியஸில் உள்ள ஜமாத் நிர்வாகத்தைக் குறித்தும், மற்றும் அதன் தலைவரைக் குறித்தும் நினைவு கூற விரும்புகின்றேன். அதாவது, ஜமாஅத்தின் ஒரு ஊழியர் என்ற முறையில், அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தில் நிகழ்ந்துள்ள பல பிரச்சனை களுக்கும் நான் சாட்சியாகவே இருந்துள்ளேன். மேலும், நீண்ட நாட்களுக்கு முன்பாக, மொரீஷியஸில் உள்ள அஹ்மதிய்யா ஜமாத்தானது, அதன் உறுப்பினர்களுக்கு அவர்களுடைய கஷ்டமான நேரங்களில் உதவி புரிவதற்காக கடன் உதவிகளை வழங்கியுள்ளது. அதில் பலபேருக்கு ரூ.30,000, ரூ.40,000, முதலான தொகைகளை வழங்கி

இருந்தார்கள். இவ்வாறு கடன்களைப் பெற்ற இத்தகைய பல அஹ்மதிகளும், தங்களுடைய கலீஃபாவிற்கு [நான்காவது கலீஃபாவின் காலத்தில்] முன்னுரிமை வழங்குவதற்கு பதிலாக, பணத்திற்கே முன்னுரிமை வழங்கினார்கள். அவர்கள் தங்களுடைய தலைவரை விட பணத்திற்கு முக்கியத்தும் அளித்து அப்பணத்தை திருப்பித் தராமலேயே இருந்தனர். மேலும், இச்சம்பவம் சமீபத்திய முன்னால் அமீர் (முதலாவது அமீர்/தலைவர்) பொறுப்பில் இருந்தபோது நிகழ்ந்தது. இந்த சூழ்நிலையைப் பார்த்த நான்காவது கலீஃபா அவர்கள், மொரீஷியஸில் உள்ள ஜமாஅத்தின் உறுப்பினர்கள் தங்களுடைய பணத்தை திருப்பித் செலுத்தாததன் காரணமாக, அவர்களுக்கு கடன்கள் தருவதிலிருந்தும் நிர்வாகத்தை தடை செய்தார்கள். மேலும், இரண்டாவது முன்னாள் அமீர் [நிஜாம்-இ-ஜமாத்திலிருந்து வெளி யேற்றப்பட்டவரான] இவர் அமீர் ஆனபோது, இவரது தோழருக்கு பணம் தேவைப்பட்டதன் காரணமாக, [அதாவது, தோழரான இந்த முன்னாள் அமீர்தான், காலத்தின் இறை வெளிப்பாடு தொடர்பாக, ஜமாஅத்தில் குழப்பத்தை ஏற்படுத்தியவரும், மற்றும் அனைத்து பிரச்சினைகளும் எழுவதற்கு காரணமாக இருந்த வருமாவார்], அந்த இரண்டாவது அமீர்தான் இவரது (தோழரான முதல் அமீர்) சார்பாக கோரிக்கை வைத்ததுடன், இவருக்கு கடன் வழங்குவதற்கு கலீஃபாவிடம் அனுமதியும் கோரினார். எனினும், கலீஃபா கடன் தருவதற்கு மறுத்து, அவரை கண்டிக்கவும் செய்ததுடன், அமீருடைய சுய பொறுப்பிலேயே, (அந்த மோசமான மனிதருக்கு) கடனைத் தருமாறும் கூறினார்கள். (ஆயினும்), அப்பணத்தை திருப்பி தருவதாக (கூறிய ) கடனையும், அவர் அளித்த வாக்குறுதியையும் கூட, இந்த மனிதரால் கண்ணியப்படுத்த முடியவில்லை.

(இந்நிலையில்) தற்போது என்னைப் பின்பற்றுபவர்கள் தொடர்பாக, அவர்கள் (இக்காலத்தின்) இறை வெளிப்பாட்டில் தங்களை ஒன்றிணைத்து கொள்வதற்கு முன்பே, அவர்களுக்கு ஒரு முறையான வேலை இல்லாததன் காரணமாக, அஹ்மதிய்யா ஜமாத்திலிருந்து ஒரு சிறிய கடன் தொகையை அவர்கள் வாங்கியதாலும்,, அவர்களால் தங்களுடைய கடன் தொகைகளை விரைவாக திருப்பி செலுத்த முடியாததாலும், இதுபோன்ற தவறான குற்றச்சாட்டுக்கள் அவர்களின் மீது சுமத்தப்படும்போது, நான் அவர்களுடைய ஆன்மீகத் தந்தையாக இருப்பதாலும், மற்றும் என்னுடைய பணம் அஹ்மதிய்யா ஜமாத்தில்

இருப்பதை நன்கு அறிந்திருப்பதாலும், இத்தனை வருடகால இழப்பீடுகளாக, அஹ்மதியா ஜமாத் எனக்கு கடன்பட்டுள்ள சுமார் ரூபாய் 300,000/ (மூன்று இலட்சம்) பணத்தை, அஹ்மதிய்யா ஜமாத்திடம் கடன் ஒப்பந்தங்கள் செய்துள்ள என்னுடைய ஸஹாபாக்கள் அனைவரின் சார்பாகவும் கழிக்கப்படுவதற்கு நான் முற்றிலும் தயாராக உள்ளேன். என்னுடைய கடின உழைப்பினால் உண்டான பணம் உங்களிடம் இருக்கின்றது! ஆதலால், அவர்களின் மீதான கடன் தொகைகளை உடனடியாக நீங்கள் அகற்றவேண்டும் என்று நான் உங்களிடம் கோரிக்கை விடுக்கின்றேன். இதன்படி, எங்களின் நேசத்திற்குரிய நபி பெருமானார் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களும், 'ஒரு தொழிலாளியின் வியர்வை காய்வதற்கு முன்பாகவே, அவரது சம்பளம் [முழுமையாக] வழங்கப்பட வேண்டும்' என்று கூறியுள்ளார்கள். அதாவது, ஒரு தொழிலாளி தான் செய்யும் பணிகளுக்காக, நம்மை பண அடிப்படையில் கழுத்தை நெருக்குகின்ற (பாணியில் பேசினாலும்) கூட, நாம் அவருடைய பணத்தை நிச்சயமாக கொடுத்தே ஆக வேண்டும்.

[மொரிஷியஸ்] ஜமாஅத் அஹ்மதிய்யாவின் உறுப்பினர்கள், மொரீஷி யஸில் ஜமாஅத் அஹ்மதிய்யா நிறுவப்பட்ட நூற்றாண்டான (1915-2015), 2015 இல் என்ன நடந்தது என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும். ஒரு ஜமாத் எவ்வாறு நிறைய சோதனைகளையும், ஏராளமான சூறாவளிகளையும் (அதாவது மிகக்கடினமான நேரங்களையும்) எதிர் கொண்டுள்ளது என்பதைக் குறித்து மொரீஷியஸில் உள்ள அஹ்மதிய்யா ஜமாத்தின் உறுப்பினர்கள் (அந்த நூற்றாண்டு விழாவில்) பிரதிபலிக்க வேண்டும் என்றிருந்த பட்சத்தில், அங்கு என்ன நடந்தது?, அவர்களுடைய கலீஃபா இந்த தனி சிறப்புமிக்க நிகழ்வை அவர்களுடன் சேர்ந்து கொண்டாடுவதற்குக்கூட வரவில்லை. மாறாக அந்த நேரத்தில், அவர் இந்நாட்டிற்கு வருவதற்கு பதிலாக வேறொரு நாட்டிற்கு செல்லவே விரும்பினார்.

அச்சமயத்தில், மொரீஷியஸில் உள்ள அஹ்மதிய்யா ஜமாஅத் அதற்குரிய ஏற்பாடுகளில் மிகவும் மும்முரமாக இருந்தது. அவர்கள் (மொரீஷியஸ்) தீவு முழுவதும் பெரிய விளம்பர பலகைகளை வைப்பதிலும், இன்னும் (சுற்றுலாத் தலமான) பெட்டிட்-ராஃப்ரேயின் அருகாமையிலும்கூட ஒரு

பெயர் பலகையை கொண்டுவந்து வைப்பதிலுமாக இருந்தனர். அதன் பின்னர் என்ன நிகழ்ந்தது? ஒன்றும் நடக்க வில்லை! அதாவது, ஏறக்குறைய ஒரு வாரத்திற்குப் பின்னர், அங்கு வைத்திருந்த பெயர் பலகைகளும், மற்றும் ஏனைய விளம்பரப் பலகைகள் அனைத்தும் அகற்றப்பட்டன. மேலும், இத்தகைய மிக விலை உயர்ந்த விளம்பர பலகைகளை இவ்வாறு தேவையில்லாமல் இவர்கள் பயன்படுத்தியதன் விளைவாக, ஏராளமான பணமும் வீணடிக்கப்பட்டதுடன், அவர்களுடைய கலீஃபாவும் தன்னுடைய மனதை மாற்றிக் கொண்டு, இனி வரப்போவதில்லை என்றும் முடிவெடுத்தார். மேலும், அஹ்மதி உறுப்பினர்கள் தங்களுடைய தலைவரை வரவேற்க தியாகம் செய்து செலவிட்ட சந்தா பணம் முதலான அனைத்து பங்களிப்புகளைக் குறித்தும் தற்போது சிந்தித்து பாருங்கள். இந்த பணங்கள் யாவும் வீணடிக்கப்பட்ட பிறகும் கூட, அவர் இங்கு வராமல், இதற்குமாறாக, அவர்களுடைய ஜமாஅத்தை நிவர்த்தி செய்ய மட்டுமே கூறியிருந்தார். எனினும், இந்த மக்கள் அவரை ஒரு கலீஃபாவாக தேர்ந்தெடுத்திருந்த போதிலும், ஓர் ஆன்மீகத் தந்தையாக அவருடைய பங்களிப்புத்தான் என்ன? (உண்மையில்) அவர் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, இங்குள்ள ஜமாத்தின் பிரச்சனைகளை சரிசெய்வதற்காக இங்கு வந்திருக்க வேண்டும்!

இன்னும், நீங்கள் அல்லாஹ்வையும் அவனுடைய போதனைகளையும் மற்றும் நமது மாநபி பெருமானார் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் போதனைகளையும் விட்டு வெளியேறுகின்ற போதுதான், இவ்வாறான அசம்பாவிதங்கள் நிகழும். (உண்மையில்) நீங்கள் மனிதனால் தேர்ந்தெடுக்கப்பட்டவரின் மீதுதான் உங்களுடைய நம்பிக்கை முழுவதையும் வைத்துள்ளீர்கள். அதனால் ஏற்பட்டுள்ள அனைத்து தவறுகளையும் பாருங்கள்! அதாவது, எவ்விடத்தில் இறை வழிகாட்டுதல் இல்லையோ, அவ்விடத்தில், அல்லாஹ், மற்றும் அவனுடைய தூதரின் போதனைகள்யாவும் இது போன்றே நசுக்கப்படும் அளவிலான முட்டாள்தனங்கள் நடைபெறுவதைத்தான் பார்க்கமுடியும். அன்றியும், நீங்கள் ஆணவத்தோடு உங்களை இப்லீஸைப் போன்றும் வெளிப்படுத்தி காட்டுகின்றீர்கள். அதாவது, ஒருவர் செய்த பணிகளுக்கான ஊதியத்தை அவருக்கு வழங்காமலும், இவ்வாறு பல ஆண்டுகளாக அவர் செய்த பணிகளுக்கான மொத்த தொகையையும்,

இழப்பீடுகளையும் அடிப்படையாக கொண்ட அவருக்குரிய கடன் தொகையை அவருக்கு வழங்காமலும் உள்ளீர்கள். மேலும், நீங்கள் கலீஃபாவை மக்களை அச்சுறுத்தும் பொருட்டாகவும், அவர்களுடைய உள்ளங்களில் எதிர்மறை எண்ணங்களை உருவாக்கும் பொருட்டு, ஒரு பயமுறுத்தும் நபராகவே முன்வைக்கின்றீர்கள். மேலும் நீங்கள், அவர்களிடம் எல்லா விழாக்களிலும், மற்றும் குடும்ப நிகழ்ச்சிகளிலும் கூட அவர்கள் எங்களை அழைக்கவோ, சந்திக்கவோ கூடாது என்று உத்தரவிடுவதுடன், எங்களை புறக்கணிக்க வேண்டும் என்று (கூறி) அவர்களை ஊக்குவித்து இந்த வாய்ப்பை நீங்கள் பயன்படுத்திக் கொள்கின்றீர்கள். மேலும், இங்கு மொரீஷியஸில் உள்ள அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைமைப் பொறுப்பில் உள்ள இந்த பொறுப்பாளர்கள் ஒவ்வொரு தனிப்பட்ட குடும்ப விஷயங்களிலும்கூட தங்களுடைய மூக்கை நுழைக்கின்றனர். இவர்கள் தங்களை கலீஃபாவின் சிறந்த பாதுகாவலர்களாக காட்டிக்கொண்டு செயல்படுவதுடன், மற்றவர் களையும், பொதுமக்களையும், ஏழைகளையும், மற்றும் சிறிய குடும் பங்களையும்கூட தங்களுடைய விருப்பப்படியே நடத்துகின்றனர். இவ்வாறான ஒரு நடைமுறையிலேயே, தேசிய மற்றும் சர்வதேச அஹ்மதிய்யா ஜமாஅத்தும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. இவர்கள் அல்லாஹ்வின் சட்டங்களை ஒன்றுமில்லாத குப்பைகளாக்க முயற்சி செய்வதுமட்டுமன்றி, தங்களுடைய (சுய) சட்டங்களை உறுதியானதாக முன்வைக்கவும் முயற்சி செய்கின்றனர். [இவர்களின் வரையறையின்படி, இவர்களது சட்டங்கள் தான் கீழ்படுவதற்கு தேவைப்படும் உறுதியான சட்டங்களாகும்].

மேலும், அவர்களுடைய (இப்படிப்பட்ட சுய) செயல்களின் விளைவாக, அல்லாஹ் அவர்களை, அவர்கள் அதனை அறிந்து கொள்ளாத வண்ணம், படிப்படியாக அழிவின் பக்கம் இட்டுச் செல்கின்றான். மேலும், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தற்போதைய நிர்வாகத்தினால், உலகம் முழுவதும் உள்ள மக்கள் மிக அதிகமாக அந்த ஜமாத்திலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கின்றனர் என்பதையும் என்னால் உறுதியாகக் கூறமுடியும். இது ஏனென்றால், தக்வா என்பது தலைமைப் பொறுப்பில் உள்ளவர் களிடம் இல்லாத காரணத்தினாலேயே ஆகும். எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த மக்களிடம் குடும்ப உணர்வுகள் அதிகமாக உள்ளது. அதாவது, அவர்கள் இறை சட்டங்களின்படி நடக்கவில்லை.

மட்டுமல்லாமல், தங்களுடைய குடும்ப உறுப்பினர்களின் தவறு களையும் மறைக்க முற்படுவதுடன், அவர்களுடைய தவறுகளுக்கு எப்போதும் ஆதரவாகவும் உள்ளனர்). மேலும், அவர்கள் (ஜமாஅத் அமைப்பில்) வம்ச அடிப்படையிலான ஒரு கருத்தையும் அவர்கள் ஆதரிக்கின்றனர். அவர்கள் எப்போதும் தலைமைப் பொறுப்பிலிருந்து கொண்டு ஜமாஅத்தை கட்டுப்படுத்த முயற்சிக்கின்றனர். இது மிகவும் துரதிர்ஷ்டவசமான ஒரு நிலைமையாகும். (உண்மையில்) இந்த ஜமாத், திருக்குர்ஆன், மற்றும் நமது மேன்மைமிக்க எம்பெருமானார் ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்களின் போதனைகளின் அடிப்படையில் இருக்க வேண்டிய ஒன்றாகும். (முதலில்) அல்லாஹ், மற்றும் நபி பெருமானார் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் நமக்கு எதனைக் கற்றுத் தந்துள்ளார்களோ அதனையே நாம் கடைப்பிடித்தாக வேண்டும். எனினும் துரதிர்ஷ்டவசமாக, அவர்கள் எதனை போதித்தார்களோ அதற்கு முற்றிலும் மாற்றமான விஷயங்கள் தான் இப்போதெல்லாம் நடைமுறையில் இருந்து வருகிறது.

மேலும், எனது பேருரையின் ஆரம்பத்தில் நான் கூறியது போன்று, மொரீஷியஸில் உள்ள மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை ஆராய்வதற்காக அவர்களுடைய தலைவர், மொரீஷியஸிற்கு தன்னுடைய பிரதிநிதிகளில் ஒருவரை அனுப்பி இருந்தார். இது ஓர் அச்சத்தின் வெளிப்பாடாகும். அதாவது, இங்கு மொரீஷியஸில் உள்ள மக்களின் பிரச்சினைகளைப் பார்ப்பதற்காக அந்த நபரைப் அவர்கள் அனுப்பியுள்ளது என்பது உலகெங்கிலும் ஜமாஅத்துல்-ஸஹீஹ்-அல் இஸ்லாத்தின் வளர்ச்சியை, குறிப்பாக இந்தியாவில் சமீபத்தில் ஏற்பட்டுள்ள (வேகமான முன்னேற்றத்)தைக் கண்டு கலீஃபா எந்தளவு அதிகமாக கவலைப்படுகின்றார் என்பதையே இது காட்டுகின்றது என்றுதான் என்னால் கூறமுடியும். மேலும், இந்தியாவில் உள்ள அவரது அமீர்களும், மார்க்க போதகர்களும் இன்னும் பிற நாடுகளில் உள்ளவர்களும் கூட அவருக்கு அங்கு நிகழும் அனைத்து நிகழ்வுகளின் தகவல்கள் மற்றும் கருத்துக்களையும் தந்து கொண்டிருக்கின்றனர். இதன் காரணமாகவே, ஒரு அச்சத்தின் சூழல் (அவரிடம்) உருவாகியுள்ளது. மேலும், மொரீஷியஸில் உள்ள அஹ்மதிய்யா ஜமாஅத்தை சேர்ந்தவர்கள் எவரும் ஜமாஅத்-உல்-ஸஹீஹ்-அல்-இஸ்லாத்தின் (பக்கம் ஈர்க்கப்பட்டுவிடக்கூடாது என்றும், அதன்) தாக்கத்

திற்கு ஆளாகிவிடக்கூடாது என்ற (தனது அச்சத்தை நீக்கி) அவர் தன்னை உறுதிப்படுத்திக் கொள்ள விரும்பினார். இதனால் அவர் தனது பிரதிநிதியை, (அவர்கள் விரக்தியடைந்து வெளியேறிவிடக்கூடாது என்பதற்காக) அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காக [விரைவாக] அனுப்பினார். அவர் மொரீஷியஸில் என்ன நடக்கிறது என்பதை அறிந்துகொள்ள விரும்பினார். (அதுவும்), பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலான பிறகு! ஆகவே இந்த பிரதிநிதி (இங்கு) வந்து, ஒரு அரசியல்வாதியை போன்றதொரு வியூகத்தைப் பயன்படுத்தி, அவர்களுடைய பிரச்சினைகளை தீர்த்து வைப்பதாக காட்டிக் கொண்டார். இவைகளனைத்தும் அவர்களின் புறமுள்ள ஓர் அச்சத்தின் வெளிப்பாடாகும். இதனையே புனித திருக்குர்ஆனிலும் அல்லாஹ் கூறுகின்றான். [மேலும், இறைவெளிப்பாட்டின் ஆரம்ப கால கட்டத்தில், ஈத்-அல்-அல்ஹா தினத்தன்று, நியூ-க்ரோவில் உள்ள மசூதியை மூடுவதற்கு அந்த மக்கள் திட்டம் தீட்டியபோது, எனக்கும் கூட இவ்வசனம் இறை வெளிப்பாடாக வந்திருந்தது]. அல்லாஹ் அவ் வசனத்தை எனக்கு இவ்வாறு வெளிப்படுத்தினான்:

"எவர்களின் உள்ளங்களில் நோய் உள்ளதோ அவர்கள், அவர்களிடம் விரைந்து செல்வதை நீர் காண்பீர். (அனுகூல மாற்றத்தினால்) "எங்களுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டு விடும் என அஞ்சுகன்றோம்" என்று அவர்கள் கூறுகின்றனர். எனவே அல்லாஹ் (உங்களுக்கு) தன்னிடமிருந்து (அவனது நாட்டத்தின்படி) வெற்றியையோ அல்லது ஏதாவது ஒரு நிகழ்ச்சியையோ விரைவில் ஏற்படுத்தலாம். இதனால் அவர்கள் தங்கள் உள்ளங்களில் மறைத்து வைத்திருந்தது பற்றி கைசேத மடைந்தோராக ஆகிவிடுவார்கள். (அல்-மாயிதா 5:53).

மேலும் கூறப்போனால், இங்கும்கூட இவ்வகையான மக்கள் தான், நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுவிடுமோ என்றும் அஞ்சுகின்றனர். இதன் காரணமாக, அவர்கள் தங்களுடைய உள்ளங்களில் இரகசியமாக ஒளித்து வைத்திருந்த திட்டங்களின் விளைவாக, அவர்கள் மிகுந்த மன வருத்தத்திற்கும் ஆளாகின்றனர். அதாவது, நம் விஷயத்தில் என்ன நடக்கிறது என்பதில் அவர்கள் சிறிதும் அக்கறை இல்லாததைப் போன்று காட்டிக்கொண்டு, தங்களை மிகவும் வலுவானவர்களாக அவர்கள் சித்தரித்துக் கொள்கின்றனர். எனினும், அவர்கள் ஜமாஅத் துல்- ஸஹீஹ்-

அல் இஸ்லாத்தின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்காக இரகசியத் திட்டங்களையும் தீட்டிவருகின்றனர். மேலும், அவர்கள் முன் பக்கத்தில் (அதாவது வெளிப்புறத் தோற்றத்தில்) பார்ப்பதற்கு தங்களை பயபக்தி யுடையவர்களாகவும் காட்டிக்கொள்கின்றனர் ஆனால், அவர்கள் தங்க ளுடைய இருதயங்களில் மறைத்து வைத்திருப்பவற்றை அல்லாஹ் வின் பார்வையிலிருந்து ஒருபோதும் அவர்களால் மறைத்து விட முடியாது. அதன் பின்னர் அவர்கள், தங்களிடத்தில் (காட்ட வேண்டிய) கீழ்ப்படிதல் குறித்தும் பேசுகின்றனர். (ஆனால்), அவர்களின் தவறான செயல்களைக் குறித்தோ, அல்லது அவர்களுடைய தோல்விகளைக் குறித்தோ (ஏதாவது) கருத்து எழுப்பப்படும் போது, அவர்கள் உங்களை ஒரு கிளர்ச்சியாளர் என்று முத்திரை குத்தி விடுகின்றனர்! மேலும், அவர்கள் தங்களை இறை வெளிப்பாடுகளில் நம்பிக்கை கொண்டுள்ள வர்களாக தங்களுடைய நாவுகளால் பறைசாற்றிக் கொள்கின்றனர். ஆனால் அல்லாஹ், இந்த எளிய அடியானிடத்தில் இறை வெளிப்பாடு களை வெளிப்படுத்தும் போது, அவர்கள் இந்த வெளிப்பாடுகளை" (பொய்யான) வெளிப்பாடு களாக அழைக்கப்படக் கூடியதாக (கருதி) முத்திரை குத்திவிடுகின்றனர். மேலும் அவர்கள் நம் மீது சாபமிட்டு, நாம் தான் பேரழிவை (பெரும் குழப்பத்தை) உருவாக்குகின்றோம் என்றும் அதனால் நாம் ஜமாத்திலிருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்றும் உறுதியாகக் கூறுகின்றனர்.

இறைப் போதனைகளை நடைமுறைப்படுத்த அதிக முயற்சிகளை மேற்கொள்பவர்கள் அல்லாஹ்வுக்கும், அவனுடைய திருத்தூதருக்கும் கீழ்ப்படிய முயற்சி செய்வது மட்டுமன்றி, அவர்கள் அல்லாஹ்வை அடைவதற்காகவும் போராடுவார்கள். (இப்படிப்பட்ட) அந்த தனிச் சிறப்பானவர்கள் (அதிகார தாகமுள்ள மக்களின் பார்வையின் முன்னால்) சமுதாயத்தில் இருந்து விலக்கப்பட்டவர்களாகவும் ஆகிவிடு கின்றனர். அதே நேரத்தில், மறுபுறம், அல்லாஹ்வின் சட்டங்களை நிராகரிப்பவர்களாகவும், அல்லாஹ் ஒருவனே என்ற தவ்ஹீதின் மீதான தங்களுடைய நம்பிக்கையை மறுப்பவர்களாகவும் இருப்பவர்கள், அவர்களது சிலைக(ளான தங்களுடைய பேரன்புக்குறியவர்க) ளை அடைவதற்காகவே போராடுகின்றனர். அவர்களின் உள்ளங்களில் கடுகைப் போன்ற குறைந்த அளவிலான தக்வாவின் சுவடு கூட இருப்ப

தில்லையா? அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுவது போன்று:

அஃபாலா யத தப்பரூநல் குர்ஆன்
"அவர்கள் இந்த குர்ஆனை (கவனமாக) சிந்திக்க வேண்டாமா?"
(அந்-நிஸா 4: 83)

மேலும், இவ்வாறு ஒரு உண்மையான நம்பிக்கையாளராக ஒருவரை மாற்றுவதற்கு, அல்லாஹ் வெளிப்படுத்தியிருக்கின்ற அனைத்து அடையாளங்களையுமே அவர்கள் நிராகரித்து விடுகின்றனர். அதாவது, அவர்கள் அவற்றுக்கு எந்த முக்கியத்துவத்தையும் வழங்குவதில்லை. அவர்கள் உள்ளங்களில் மறைத்து வைத்திருப்பவற்றை அல்லாஹ் (ஸுப்ஹானஹ்) மட்டுமே அறிவான். அல்லாஹ் (ஸுப்ஹானஹ்)புனித திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

“வமா அர்ஸல்நா மிர் ரஸூலின் இல்லா லியுதாஅ பி இத்னில்லாஹ்”
"அல்லாஹ்வின் கட்டளைக்கு கீழ்படிவதற்காகவேயன்றி (மனிதர்களிடம்) நாம் தூதர்களில் எவரையும் அனுப்பவில்லை".
(அந்-நிஸா 4: 65).

ஆகவே, அல்லாஹ்வை நோக்கி மக்களை வழி நடத்துவதற்காகவும், அவர்களை சரியான பாதையில் வழிக்காட்டுவதற்காகவும், அல்லாஹ் வின் மீதுள்ள அச்சம், நேசம் மற்றும் நம்பிக்கை ஆகியவற்றை அவர்கள் வளர்ப்பதற்காகவும் தன்புறமிருந்து அல்லாஹ் தூதரை அனுப்புவது என்பது அல்லாஹ்விடமிருந்துள்ள ஒரு அருளின் காரணமாகவேயாகும். இதற்கான வெகுமதி உண்மையில் அல்லாஹ்விடமிருந்து மட்டுமே அவர்களுக்கு கிடைக்கும். மேலும், எப்பொழுது அவர்கள் தங்களுடைய உள்ளங்களில் இந்த பண்புகள் யாவற்றையும் வளர்த்துக் கொள்கின்றார் களோ, அப்போது தான் இந்த மக்கள் இறை ஏகத்துவத்தை நோக்கி மற்றவர்களை அழைப்பதற்கு தகுதியுடையவர்களாக ஆகிவிடுவார்கள். இதன்மூலம், இவர்கள் தாயி-யே -இலல்லாஹ் (அல்லாஹ்வின் பக்கம் அழைப்பவர்களாக) ஆகிவிடுவார்கள். இவ்வாறான அல்லாஹ்வின் சட்டங்கள்தான், அவர்களுக்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். அவர்கள் இந்த தற்காலிக பௌதீக வாழ்க்கையை விட மரணத்திற்குப் பிறகுள்ள வாழ்க்கையையே விரும்புகின்றனர். அது மட்

மட்டுமன்றி, இவர்கள் அல்லாஹ்வை அடைவதற்காகவே போராடவும் செய்வார்கள். மேலும், அல்லாஹ்வை அடைவதற்காக போராடும் ஒருவர், அவர் அதில் வெற்றிப் பெற்றாலும் சரி, அல்லது மரணம் அடைந்தாலும் சரி, அவருக்கான வெகுமதி என்பது அல்லாஹ்விடமிருந்து மட்டுமே கிடைக்கும். மேலும், அவர் ஒரு பெரும் வெகுமதியை (அஜ்ரன் அஸீமாவை) பெறுவார் என்பதிலும் எந்த சந்தேகமும் இல்லை.

எனவே, ஒருவர் மற்றவர்களுடைய நம்பிக்கையில் (தென்படும் குறைகளைக் கண்டுபிடித்து) தீர்ப்பளிப்பதற்கு முன்பாக, அவர் தன்னுடைய நம்பிக்கையை முதலில் ஆராய்ந்து மதிப்பீடு செய்து கொள்ள வேண்டும். யார் தூய்மையாளர் என்பதை அல்லாஹ் (ஸுப்ஹானஹ்) மட்டுமே அறிகின்றான். எனவே, ஆணவம் கொண்டு விடாதீர்கள், மேலும் மற்றவர்களை விட நீங்கள்தான் தூய்மையானவர் என்(பது போன்)று பாசாங்கு செய்யாதீர்கள். குர்ஆனைப் படியுங்கள்; எவன் உங்களை படைத்தானோ, எவன் உங்களை இந்த பூமியின் மீது அனுப்பினானோ, எந்த ஒருவனின் கைகளில் உங்களது வாழ்வு, மரணம், உணவு, குடித்தல், நன்மதிப்பு போன்றவை காணப்படுகின்றதோ அவனை புரிந்து கொள்ளுங்கள். மேலும் அல்லாஹ் கூறுகின்றான்

அலம் தர இலல்லதீன யுஜக்கூன அன்ஃபுஸகும்? பலில்லாஹு யுஜக்கீ மய்யஷாஹு வலா யுழ்லமூன ஃபதீலா (அந்நிசா 4:50)

"தங்களைத் தாங்களே பரிசுத்தமானவர்கள் என்(று கருது)பவர்களை நீர் பார்க்கவில்லையா? மாறாக அல்லாஹ்வே, தான் நாடியவர்களைப் பரிசுத்தமாக்குகின்றான். மேலும் அவர்கள் சிறிதளவும் அநியாயம் செய்யப்படமாட்டார்கள்".

இந்த குர்ஆனின் வசனத்திலிருந்து நீங்கள் அறிந்து கொள்வது என்ன வென்றால், அல்லாஹ்வின் வார்த்தைகளிலும் சட்டங்களிலும் மிகக் குறைந்த அளவிலான தோல்வி கூட கிடையாது என்பதாகும். (அதாவது) நீங்கள் செய்யக்கூடிய எல்லா நன்மைகளுக்கும் அவன் ஒரு நல்ல வெகுமதியை வழங்குவான், மேலும் நீங்கள் செய்யும் எல்லா தீமைகளுக்கும் அவன் அதற்கேற்ப உங்களைத் தண்டிப்பான். அல்லாஹ் எவருக்கும் அநீதி இழைப்பதில்லை, (எந்த அளவிற்கென்றால் அது) ஓர்

எறும்பு அளவு பெரிதாக இருப்பினும் சரியே. அவன் நீங்கள் செய்கின்ற மிகச் சிறிய நல்லவற்றிற்கும் கூட வெகுமதியை வழங்குகின்றான். அவன் நீங்கள் செய்கின்றவற்றிற்கேற்ற (அளவில்) வெகுமதியை அளிப்பதோடு மட்டுமன்றி, அதற்கான கூலியை பன்மடங்காகவும் ஆக்குகின்றான். (இது) அவன் உங்களுக்கு தன் புறத்திலிருந்து (அதிகப்படியாக) வழங்குகின்ற ஒரு மகத்தான நற்கூலியாகும்.

எனவே, வழிதவறும் பாதையில் செல்வோர் (அதற்குக் காரணம்): உண்மையில் அவர்கள் நிறைய தவறுகளைச் செய்திருப்பதும், இறைச் சட்டங்களை மதிக்காமல் தங்களது சொந்த சட்டங்களையும்/ விதிக ளையும் ஏற்படுத்தியிருப்பதும் ஆகும். அவர்கள் உங்களையும் வழி தவறச் செய்ய முற்படுகிறார்கள்; (அதாவது நம்பிக்கை கொண்டவர் களான) உங்களையும் அதேப்போன்று தவறான பாதையில் செல்வதை யும். அவர்களைப் போலவே தாழ்ந்த நிலைக்கு வந்து விடுவதையுமே அவர்கள் விரும்புகின்றார்கள். மேலும், பூமியில் நீங்கள் செய்த எல்லா செயல்களுக்கும், நீங்கள் (மீண்டும் எவனிடம்) திரும்பிச் சென்று கணக்குக் கொடுக்க வேண்டுமோ அத்தகைய உங்கள் படைப் பாளனுக்கு மட்டுமே நீங்கள் அஞ்ச வேண்டும் என்றிருக்க, அவர்களோ (தம்மைப் போன்றே) உங்களையும் மற்றவர்களுக்கு அஞ்ச வைக்க முற்படுகிறார்கள்.

அல்லாஹ் உங்களுக்கு தடை செய்துள்ள அனைத்து முக்கிய விஷயங்களையும் நீங்கள் தவிர்த்துவிட்டால், (அவைகள் அனைத்திலும் உங்களுக்கு) நல்ல விளைவுகளே (ஏற்படும் என்பதை) மனதில் கொள்ளுங்கள். அல்லாஹ் எல்லாவற்றையும் உங்களுக்காக தெளிவு படுத்தவே விரும்புகிறான். (எவ்வாறென்றால்) மக்களிடையேயும் உங்கள் குடும்பங்களிடையேயும் எவ்வாறு நேர்மையாகவும், தாழ்மையுடனும், மரியாதையாகவும், சமாதானத்தைப் பரப்பக்கூடியவராகவும், வெறுப் பிற்கு இடம் கொடுக்காமலும், உங்களைப் போன்ற சக மனிதர்களுக்கு உதவுவதையும், மற்றவர்களிடத்தில் புறக்கணிப்பை (boycott) ஏற்படுத்திவிடாமல் இணக்கமாகவும் சகோதரத்துவ பாசத்துதனும் வாழ வேண்டும் என்பதையே அவன் உங்களுக்குக் காட்டித்தருகிறான். உண்மையில், இறை நம்பிக்கையாளர்களின் இரண்டு குழுக்கள், தம்மிடையே சண்டையிட்டுக் கொண்டால், நீங்கள் அவர்களுக்கிடையே

அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்பதையே அல்லாஹ் (சுபஹ்) நமக்குக் கற்பித்திருக்கிறான். மேலும், மக்களிடையே நீதியையும், சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் நிலை நாட்டக்கூடியவர் களை அல்லாஹ் நேசிக்கிறான். அல்லாஹ் இறை நம்பிக்கையாகளிடம் கூறுகின்றான்:

நிச்சயமாக முஃமின்கள் (யாவரும்) சகோரர்களே ஆகவே, உங்கள் இரு சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானம் உண்டாக்குங்கள்; இன்னும் உங்கள் மீது கிருபை செய்யப்படும் பொருட்டு, நீங்கள் அல்லாஹ்வை அஞ்சங்கள்.(49:11)

இந்த இறைவனின் வார்த்தைகளை நீங்கள் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். உண்மையில், அல்லாஹ்வே உங்களைப் படைத்துள்ளான். மேலும் அவனுடைய வார்த்தைகளில் எந்த குறைபாடும் இல்லை. அல்லாஹ்வின் வார்த்தைகளில் ஏதேனும் வெறுப்பு, புறக்கணிப்புக்கான வழிமுறைகள், குடும்ப உறவுகளை முறித்துக் கொள்ளுதல், மக்களின் வாழ்த்துக்கு பதிலளிக்காத அறிவுறுத்தல்கள் அல்லது வாழ்த்து ஸலாம் கூறக்கூடாது என்பன போன்ற அறிவுறுத்தல்களும் கூட உள்ளனவா? மாறாக, எல்லா தீய செயல்களும், அல்லாஹ்வின் வார்த்தைகளிலிருந்து விலகிச்செல்லும் அனைத்து அறிவுறுத்தல்களும் (உண்மையில்) ஷைத்தானிடமிருந்து வந்துள்ளவையாகும். இவற்றையெல்லாம் ஊக்குவிப்பது ஷைத்தான் ஆவான். ஷைத்தான் அல்லாஹ்வுக்கும் அவனுடைய உண்மையான விசுவாசிகள் அனைவருக்கும் ஓர் எதிரி ஆவான். ஷைத்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுபவர்களுக்கு அல்லாஹ்வின் மீதும் அவனது தூதர் மீதும் உண்மையான நம்பிக்கை இருப்பதில்லை. எல்லா தீய செயல்களும் அல்லாஹ்வின் மீதும், அவனது தூதரின் மீதும் நம்பிக்கை கொண்டிருப்பவர்களின் நடைமுறைகளாக இருப்பதில்லை. அவை உண்மையான நம்பிக்கை யாளரின் நடைமுறைகள் அல்ல.

நீங்கள்தான் அந்த [உண்மையுள்ள] ஜமாஅத் என்றும், உங்களிடத்தில் தான் இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கின்ற ஒரு ஆன்மீகத் தலைவர் (உங்களுக்கு) மேலே இருக்கின்றார் என்றும், சொர்க்கத்திற்கு வழிவகுக்கும் பாதையும் உங்களிடத்தில் தான் உள்ளது என்றும் உரிமை

கோருவீர்களேயானால், பிறகு, நீங்கள் (எவ்வாறு) அவ்வகையிலான (தீய மனநிலையைக்) கொண்டவர்களாக இருக்கின்றீர்கள்? நீங்கள் (எவ்வாறு) வெறுப்புடனும், பகையுடனும் அல்லாஹ்வால் பரிபூரணப் படுத்தப்பட்ட மார்க்கத்தின் பக்கம் மக்களை வழிநடத்துவீர்கள்? நீங்கள் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் போதனைகள் இவைகள்தானா? இறை வெளிப்பாடுகளின் கதவு மற்றும் தீர்க்கதரிசிகளின் வருகை (நபித்துவம்) திறந்திருக்கின்றது, (அவை) நிறுத்தப்படவில்லை என்பதை நிரூபிக்க எண்ணற்ற எதிர்ப்புகளையும் சந்தித்துள்ளீர்கள், விவாதங்களையும் நீங்கள் நடத்தியுள்ளீர்கள்; (ஆனால்) இந்த தற்போதைய (நூற்றாண்டில்) சகாப்தத்தில், இந்த தாழ்மையான ஊழியனை (அவ்வாறு) அல்லாஹ் எழுப்பியபோது மனிதனால் தேர்ந் தெடுக்கப்பட்ட உங்களது கலீஃபாவைப் பாதுகாப்பதற்காக வேண்டி, அத்தகைய சாத்தியங்களையும், அத்தகைய உண்மைகளையும் நீங்களே மறுக்கின்றீர்கள். “மற்றவர்கள் இறை வெளிப்பாடுகளைப் பெறுவது சாத்தியமில்லை என்றும், வேறுயாரும் கலீஃபாவாக ஆக முடியாது" என்றும் நீங்கள் கூறி வருகின்றீர்கள்.

(முன்னர் கூறி வந்த) அத்தகைய உண்மையை அவர்கள் மறுக்கிறார்கள், மேலும் அவர்கள் தங்கள் சொந்த விருப்பப்படியே இறைவெளிப்பாடுகள் மற்றும் தூதுத்துவத்தின் கதவையும் மூடியதன் காரணத்தால், அவர்கள் தங்களைத் தாங்களே இழிவுபடுத்திக் கொள்கிறார்கள், வரலாறு எவ்வாறு மீண்டும் மீண்டும் திரும்புகின்றது என்பதைப் பார்க்கிறோம். அதாவது,எப்பொழுதெல்லாம் அல்லாஹ்விடமிருந்து ஒரு தூதர் வருகை தருகின்றாரோ (அப்போதெல்லாம்) அவர்கள் அவருக்கு எல்லா வகையான கெட்ட பெயர்களையும் வழங்கிவிடுகின்றார்கள். அவர்கள் அவரை ஒரு பொய்யர் என்றும் ஒரு பைத்தியக்காரன் என்றும் முத்திரை குத்துகிறார்கள். (இன்னும்) அவர்கள் (அவருக்கு இறங்குக்கின்ற) இறை வெளிப்பாடுகளைக் கூட (பொய்யான) "வெளிப்பாடுகள் என்று அழைக்கப்படுபவை" என்று கூறி முத்திரை குத்திவிடுகின்றார்கள். அல்லாஹ்வின் தூதருக்கு செவிமடுத்து, அவரைப் பின்பற்ற விரும்புகின்ற மக்களைத் தடுப்பதற்காக வேண்டி அவர்கள் மிகவும் இழிவான நிலைக்குத் தங்களை தாழ்த்திக் கொள்கின்றனர்.அவர்கள் இந்த மக்களிடம், “நீங்கள் ஒரு மந்திரவாதி (யை அல்லது ஒரு) பைத்தியக்காரனை மட்டுமே பின்பற்றுகின்றீர்கள்” என்பன போன்றவற்

வற்றை கூறுகின்றனர்.

அல்லாஹ்வின் தூதரின் வருகையுடன் இவையனைத்தும் நடப்பதை நீங்கள் காணும்போது, இது அவருடைய உண்மைத் தன்மையை நிரூபிக்கின்றது. புனித குர்ஆனை ஒருவர் படிக்கும்போது, அல்லாஹ்விடமிருந்து வந்த அனைத்து தூதர்களுமே ஒரே மாதிரியாக கையாளும் விதத்தைப் பெற்றிருப்பதை காண்கின்றார். எல்லா வகை யான சோதனைகளையும் கடந்து செல்லாத அல்லாஹ்வின் தூதர் எவரும் இல்லை. அல்லாஹ் அவர்களைத் தன்னுடைய தூதர்களாக எழுப்பியபோது, அவர்களுக்கு எதுவும் எளிதாக கிடைக்கவுமில்லை. அவர்களின் (தூதுச்) செய்தியை மக்கள் அனைவரும் ஒரே சமயத்தில் நம்பி(ஏற்றுக்) கொள்ளவுமில்லை. அவர்கள் அனைத்து வகையான பெரிய சோதனைகளையும் சந்தித்தனர்; தங்கள் சொந்த இரத்த உறவுகளும் கூட(அவர்களிடம் அவ்வாறே நடந்து கொண்டது).ஒரு (சின்னஞ்) சிறிய கூட்டம் மட்டுமே அவர்களை ஏற்றுக்கொண்டது. (அவ்வாறு) ஏற்றுக் கொண்டவர்களும் கூட (அவ்வாறே) துன்புறுத்தப்பட்டனர். அவர்கள் [அத்தகைய தூதர்கள் மற்றும் பின் பற்றியவர்கள்)] எல்லா வகையான சோதனைகளையும் கடந்து செல்கின்றார்கள்; அது எப்போதும் ஏழைகளும், பொது மக்களுமே [முதலில்] அல்லாஹ்வின் தூதரை நம்பி (ஏற்றுக்கொள்)வதற்கான கிருபை மற்றும் அருட் கொடையைப் பெற்றுக்கொள்கின்றனர். அது (அவர்களுக்கு) என்ன நேர்ந்தாலும் சரியே! ஆயினும் அல்லாஹ்வின் தூதரை ஆரம்பத்தில் ஏற்றுக்கொள்ளும் நபர்களில் இப்படிப்பட்டவர் களும் இருக்கின்றார்கள், (அதாவது) அவர்கள் அனுபவிக்கும் அதிகப்படியான துன்புறுத்தல்கள் மற்றும் சோதனைகளின் வாயிலாக கடந்து செல்கின்றார்கள், பிறகு, மக்கள் அவர்களை புறக்கணிக்கத் தொடங்கும்போது (boycott), அந்த அனைத்து சோதனைகளையும் தாங்கிக் கொள்ள முடியாத வகையிலான மக்கள் இறை வெளிப்பாட்டை விட்டும் வெளியேறிவிடுகின்றனர். மேலும் அவர்கள் (செய்திருந்த) உடன்படிக்கையை( பைஅத்தை)யும் முறித்து விடுகின்றனர்.

அல்லாஹ்வின் தூதரின் (இறை வெளிப்பாட்டின்) வட்டத்தை ஒருங் கிணைக்கும் (கூட்டத்தில்) நயவஞ்சகர்களைச் சார்ந்த நபர்களும் கூட உள்ளனர். (அவர்கள்) குழப்பத்தை மட்டுமே உருவாக்குகின்றனர். மேலும்,

அவர்கள் (இங்கு) வந்து எல்லா வகையான பொய்களையும் புனைந்து உருவாக்குகின்றனர். அதன் பின்னர் இறை வெளிப்பாட்டிலிருந்தும் வெளியேறி அத்தகைய பொய்களை பரப்பவும் செய்கின்றனர். அவர்கள், அத்தகைய அனைத்து இறை வெளிப்பாடுகள், அடையாளங்கள் மற்றும் அருட்கொடைகளையும் கூட (பொய்யான) வெறும் பழங்கதைகள் தான் என்றுக் கூறுவதற்கும் துணிந்து விடுகின்றார்கள். இன்னும் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் மீதும் கூட "அவர் மற்ற புத்தகங்களின் கருத்தைத் திருடி (நகல் எடுத்து) அவற்றையெல்லாம் (இறை)வெளிப்பாடுகளாக வழங்குகிறார்" என்று குற்றம் சுமத்துகிறார்கள். நவூதுபில்லாஹி மின் தாலிக் (இறைவன் அவ்வாறு இல்லாமல் ஆக்குவானாக!)

இன்று நான் இங்கே, இந்த வெள்ளிக்கிழமை குத்பாவை நிறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது., இல்லையெனில் அது மிக நீண்டதாகிவிடும். ஜமாஅத் அஹ்மதிய்யாவிலுள்ள மக்களின் பிரச்சினை களைக் கேட்க வந்த பிரதிநிதிக்கு நான் விளக்கியிருந்த கடிதத்தையும் (இத்துடன்) இணைத்தால் பயனுள்ளதாக இருக்கும். மேலும், அந்த பிரதிநிதியும் ஏற்கனவே திரும்பிச் சென்று நீண்ட காலமாகிவிட்டது. ஆனால் அவருடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு இப் போதுவரை அவர்களது பிரச்சினைகளுக்குறிய பதில்களும் கிடைக்க வில்லை; சரியான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(நான் அவர்களுக்கு பதிலளிப்பதற்கான வாய்ப்பையும் வழங்கியிருந்தேன். நீண்ட காலம் காத்திருந்தேன், (ஆனால்) இப்போது அந்த கடிதத்தின் உள்ளடக்கத்தை வெளியிடுவதற்கான நேரம் வந்துவிட்டது). ஆயினும், அந்த கடிதத்தை (இந்த) வெள்ளிக்கிழமை குத்பாவில் என்னால் படிக்க முடியாது. ஆனால் (நமது) இணையதளத்தில் இந்த வெள்ளிக்கிழமை குத்பாவுடன் இணைத்து [அதன் அசல் ஆங்கிலத்தில்] வெளியிடப்படும். இன்ஷா-அல்லாஹ்.

இந்த சொற்பொழிவை முடிப்பதற்கு (முன்), அறியாமையினாலோ அல்லது முழு அறிவுடனோ அல்லாஹ்வின் சட்டங்களை (மிகவும் விரும்பத்தகாத வகையில்) விமர்சிக்கின்றவர்களுக்கு நான் அறிவுறுத்துகின்றேன்: அவர்கள் அல்லாஹ்வின் முன் முற்றிலுமாக மனந்திரும்ப வேண்டும். அல்லாஹ்வின் சட்டங்கள் என்பது ஒரே ஒரு

சகாப்தத்திற்கு மட்டுமே உரித்தானதல்ல. அவை இறுதிநாள் வரை செல்லுபடியாகக் கூடியதாகும். அல்லாஹ்வின் சட்டங்களில் எந்தவொரு மாற்றத்தையும் கொண்டுவர நமக்கு (எந்த) உரிமையும் இல்லை. அவற்றை நாம் விமர்சிக்கவும் கூடாது.

நாம் நமது அறியாமையினால் எதையும் கூறிவிடக்கூடாது என்பதில் கூடுதல் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும். (இல்லையென்றால்) அது (நமது) நம்பிக்கையை (ஈமானை) இழக்கச் செய்து விடும். அல்லாஹ் வின் சட்டங்கள் விஷயத்தில் நாம் பயன்படுத்தும் சொற்களைத் தேர்ந்தெடுப்பதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். நாம் எழுதுகின்ற போதும் கூட (அதனால் அல்லாஹ்வின் விருப்பத்திற்கு எதிராக எதனையும் எழுதி விடாமல்] நமது பேனாவை கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

நாம் ஓர் இஸ்லாமல்லாத நாட்டில் வாழ்ந்து வருகின்றோம்; அல்லாஹ் வின் சட்டங்களை மறுக்காமலும், விமர்சிக்காமலும் அந்த (நாட்டின்) சட்டங்களை நாம் மதிக்கின்றோம். மனிதனை திருப்திப்ப டுத்துவதற்காக (வேண்டி) அல்லாஹ்வின் சட்டங்களை இழிவுபடுத்தி விடாதீர்கள். அல்லாஹ் மற்றும் அவனது திருத்தூதர் (ஸல்) அவர்களை விடவும் உங்கள் தலைவருக்கு முக்கியத்துவம் கொடுத்துவிடாதீர்கள். நீங்கள் எதைப்பற்றியாவது அறிந்திருக்கவில்லை என்றால், அமைதியாக இருப்பதே சிறந்தது. அமைதியை பேணுங்கள். எவ் (விஷயத்)தில் உங்களுக்கு அறிவு ஞானம் இல்லையோ, அது பற்றிய பேச்சில் ஈடுபடவேண்டாம்; நீங்கள் இறைச் சட்டங்களுக்கு எதிராக செல்லக்கூடாது; (அவ்வாறாயின்) அது உங்களுக்கு (பெரும்) துன்பத்தை தருவதாக அமையும். மேலும் உங்கள் மீது இறைத்தண்டனை மிக விரைவாக விழுந்து விடும். அது உங்களுக்கு மிகவும் கடுமையானதாக இருக்கும்.

இந்த சொற்பொழிவை (மிகவும்) ஆழமாக புரிந்து கொள்வதற்கு அல்லாஹ் உங்களுக்கு உதவட்டுமாக என்று நான் பிரார்த்திக்கிறேன். ஆமீன்.

# அல் குர்ஆன் 66:8

يٰۤاَيُّهَا الَّذِيْنَ كَفَرُوْا لَا تَعْتَذِرُوا الْيَوْمَ‌ؕ
اِنَّمَا تُجْزَوْنَ مَا كُنْتُمْ تَعْمَلُوْنَ

அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கு ஒருபோதும் மாறு செய்வதில்லை. அவர்களுக்கு எந்தக்கட்டளை இடப்பட்டாலும் அதனை அவர்கள் நிறை வேற்றுகிறார்கள். (அப்போது கூறப்படும்:) “நிராகரிப்பாளர்களே! நீங்கள் இன்று எந்தச் சாக்குப் போக்கும் சொல்லாதீர்கள். நீங்கள் செயல்பட்டுக் கொண்டிருந்ததற்கு ஏற்பவே உங்களுக்கு கூலி கொடுக்கப்படுகின்றது.”